

கோவை கங்கா மருத்துவமனையின் ஏர் ஆம்புலன்ஸ் சேவையை இந்திய விமானப்படை தலைமை தளபதி பிரேந்தர்சிங் தானோ கொடி அசைத்து தொடங்கி வைத்தார். அருகில் மருத்துவமனை தலைவர் சண்முகநாதன் உள்ளார்.

# கோவை கங்கா மருத்துவமனையில் ஏர் ஆம்புலன்ஸ் சேவை அறிமுகம்

**கோவை, ஜூன் 26-**

கோவையில் கங்கா மருத்துவமனை சார்பில் கங்கா ஏர் ஆம்புலன்ஸ் சேவை துவக்கவிழா, கோவை வட்டமலைபாளையத்தில் உள்ள கங்கா நர்சிங் கல்லூரி வளாகத்தில் நேற்று நடந்தது.

விழாவில் கங்கா மருத்துவமனை இயக்குனர் ராஜ சபாபதி வரவேற்றார். ஓய்வுபெற்ற பொது மருத்துவ சேவை இயக்குனர் (ஏர்) அனில்பெல், மாவட்ட கலெக்டர் ஹரிகரன், மாநகர போலீஸ் கமிஷனர் அமல்ராஜ், கோவை மேற்கு மண்டல போலீஸ் ஐ.ஜி பாரி ஆகியோர் வாழ்த்தி பேசினர். நொய்டா வருமானவரித்துறை ஆணையர் ஸ்ரீவத்சவா தலைமை தாங்கினார். இந்திய விமானப்படையின் ஏர் சீப்மார்ஷல் பிரேந்தர்சிங் தானோ துவக்கி வைத்தார்.

விபத்தில் காயமடைந்தவரை விரைவாக கொண்டு செல்லவும், உடல், உறுப்புகளை பிற நகரங்களுக்கு எடுத்துச்செல்லவும் கங்கா மருத்துவமனை சார்பில் ஏர் ஆம்புலன்ஸ் சேவை தொடங்கப்பட்டது. இந்த ஏர் ஆம்புலன்ஸ் இத்தாலியில் தயாரிக்கப்பட்ட அகுஸ்தா 199 ரக ஹெலிகாப்டர். 2 பைலட், 1 மருத்துவர், நோயாளியுடன் உறவினர் ஒருவர் பயணிக்கலாம். எரிபொருள் நிரப்பிய நிலையில் ஏர்ஆம்புலன்ஸில் 500 கி.மீ தூரம் வரை சென்றுவர முடியும். இதய துடிப்பை சீராக்கும் கருவி உள்ளிட்ட மருத்துவ வசதிகள் உள்ளன. கோவை வட்டமலைபாளையத்தில் உள்ள கங்கா நர்சிங் கல்லூரியில் ஹெலிபேடு அமைக்கப்பட்டுள்ளது.

இந்த விழாவில் கங்கா மருத்துவமனை தலைவர் சண்முகநாதன், நிர்வாக இயக்குனர் கனகவல்லி சண்முகநாதன், ராஜசேகரன் உள்பட விமானப்படை அதிகாரிகள், மருத்துவர்கள் உள்பட பலர் கலந்துகொண்டனர்.